**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | **31/2019** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | K. ராஜேந்திரன் | CASTE | : | |
| S/O | கருப்பையா சேர்வை | RELIGION | : | இந்து |
| VILLAGE | திருவாலவாயநல்லூர் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **67** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.12.2025**

<u>குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்து நான்கு வழி சாலையின் சர்வீஸ் ரோட்டிற்கு மேற்கே உள்ளது. நான்கு வழிசாலைக்கு எந்த வருடம் நிலம் எடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. சாலைக்கு நிலம் எடுக்கப்பட்ட போது நிலம் எனது உரிமையில் இருந்திருந்தால் இழப்பீடு எனக்கு கொடுத்திருப்பர்கள் என்றால் எனது ஒப்பந்தரார்கள் பெற்று இருப்பார்கள், எனக்கு தெரியாது. தாவா சொத்தின் அருகில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான், 10 வீடுகள் இருக்கும். 300 முதல் 400 வரை ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு உள்ளது என்றால் சரியல்ல.

2. தாவா சொத்திற்கு அருகே ஆரம்பத்தில் படிப்பகம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் அருகே சமுதாய கூடம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு அருகே சக்தி விநாயகர், தேவி காளியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு கோவிகளின் அருகில் குளம் உள்ளது என்றாலும் அது அரசால் புனரமைப்பு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளிடம் 12.03.2018 ல் பதிவு செய்யப்பட்டதா கிரையம் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக பொய்யாக சொல்லிஉள்ளேன் என்றால் சரியல்ல.

3. வழக்கின் 6 வது பத்தியில் 1,2 பிரதிவாதிகள் எப்போது இருந்து வழக்கு சொத்தை வாடகைக்கு விட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் 7 வது பத்தியில் சொல்லியுள்ள கண்ணாமணிக்கும் இந்த 3,4 பிரவாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. கண்ணாமணியிடம் வாடகை வாங்கியதருக்கு ரசீது கொடுத்ததாக பொய்யாக சொல்லிகிறேன் என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.